ஸ்ரீ திரிபுரஸுந்தரீஸமேத ஸ்ரீ சந்திரமௌளீச்வராயநம:

ஆர்யதர்மம்.

शान्तैरनन्यमतिभिर्मधुरस्वभावै रेकत्वनिश्चितमनोभिरपेतमोहैः ।
साकं वनेषु विदितात्मपदस्वरूपं तद्वस्तु सम्यगनिशं विमृशन्ति धन्याः ॥

ஶாந்தைரநந்யமதிபிர்மதுரஸ்வபாவை ரேகத்வநிஶ்சி
தமநோபிரபேதமோஹை:। ஸாகம் வநேஷு விதிதாத்ம
பதஸ்வரூபம் தத்வஸ்து ஸம்யகநிஶம் விம்ருஶந்தி தந்யா:॥

வெளியில் கண்டவிடங்களிலெல்லாமிழுத்துத் தீயச்செயலைச் செய்யும்படி ஏவிக்கொடிய பாபங்களுக்கு ஆளாக்கும் துஷ்டேந்திரியங்களை ஸ்வாதீனப்படுத்திக்கொண்டு மிகவும் சாந்தமான ஸ்வபாவமுள்ளவர்களாயும், தங்களைவிட்டு விலகிய மோகங்களையுடையவர்களும் பிரமக்கொண்டு அது பெரிதோ இது பெரிதோவென்று பலவிடங்களிலுமோடித் திரியாமல் ஒரு வஸ்துவிலேயே நாடி நிற்கும் மனதையுடையவர்களும் நன்கறியப்பட்ட பரமாத்மஸ்வரூபத்தையுடையவர்களுமான சில தன்ய புருஷர்கள் ஜன நிர்பந்தமில்லாத அரண்யப் பிரதேசங்களையடைந்து எப்பொழுதும் அந்தப் பரமாத்ம வஸ்துவையே நன்கு தியானித்துக்கொண்டு சுகமாய் காலம் போக்குகிறார்கள்.

சுகம் வேண்டுமென்கிற விருப்பமிருப்பின் துஷ்டங்களான இந்திரியங்களையடக்கிச் சித்தத்தை ஸரியான நிலையில் நிறுத்தி ஸம்ஸாரத்தைச்சத்ருவாக விலக்கி, ஸத்குருக்கள் மூலம் பரமாத்மஸ்வரூபத்தையறிந்து வனத்தையடைந்து ஏகாந்தமான ஸ்தானத்திலமர்ந்து எப்பொழுதும் அந்தப் பரம்பொருளைத் தியானிக்க வேண்டும். அவ்விதம் செய்யாவிடில் அடிக்கடி பல துக்கங்களையே அனுபவிக்கும்படி நேரும் என்று கருணை கொண்ட ஒரு மஹான் அறிவிக்கிறார்.

உபபத்திராதிபர்.

464

கலிகால தர்மோபதேஷ்டாக்கள்.

(436-வது பக்கத்தொடர்ச்சி)

விதவைகளாக இனி எங்களுக்கு விவாகம் வேண்டாமென்று நிறுத்தினாலன்றி இவர்கள் தடுக்க நியாயமில்லை. இவ்விதம் செய்யப்படும் மறுமணம் புருஷன் இறந்த பிறகு தான் செய்யலாம் என்று கூறுவதற்குமில்லை. அவன் இருக்கும்பொழுது அவனிடம் நல்ல திருப்தியில்லாவிட்டால் அப்பொழுதும் இவர்களுக்கு இந்தக் கஷ்டம் உண்டுதான். ஆகையால் ஜன்மாவை வீண்பண்ணாமல் மறுமணம் செய்துகொண்டாவது போகத்தை அனுபவிக்க வேண்டுமென்று கருணைபாராட்டும்படி தான் நேரும், விதவைகளிடம் ஏற்பட்டிருக்கும் இக்கொடிய கருணைவெள்ளமானது துவக்கத்தில் விதவைகளுக்கு விவாகத்தை ஸ்தாபித்து அது ஸித்தித்த பிறகு ஸ்திரீகளின் அபிப்பிராயத்திற்கிணங்க புருஷன் நடக்காத பக்ஷத்தில் அவர்கள் தமக்கிஷ்டமான புருஷனை மறுமணம்செய்து கொள்ளலாம் என்றும் ஸ்தாபித்து முடிவில் தேசாந்திரங்களிலுள்ள ஸ்திரீகள் போல் நம் தேசத்திலுள்ள ஸ்திரீகளும் தங்களிஷ்டம்போல் அவ்வக்காலத்தில் வேண்டிய பதியை அடையலாம் என்கிற இந்த தர்மத்தை உலகில் ஸ்தாபித்த பிறகு தான் சமனத்தையடையும். இதை நம் இந்தியாவில் ஸ்தாபித்து மாடு மனிதன் என்கிற பேதத்தைப் போக்கி, மிருகங்களைப்போல் விதிவிலக்கின்றி தோன்றியபடி இருக்கும்படி செய்வதைக்காட்டிலும் சிறந்த தர்மம் வேறு என்ன இருக்கிறது. இதில் உள்ள தோஷங்கள் பலவிருப்பினும் இம்மட்டோடு இதை நிறுத்திக்கொண்டு கீழ்ஜாதியிலிருப்பவர்களை மேல் ஜாதிக்கு தூக்கிவிடும் வழியையும் கொஞ்சம் கவனிப்போம்,

ஜாதிப்பிரிவென்பது அந்தப் பிராணிகளால் முன் பல ஜன்மாக்களில் செய்யப்பட்ட பாப புண்ய கர்மாக்களை யனுஸரித்து சிருஷ்டியின் துவக்கத்தில் பகவானால் ஏற்படுத்தப்படுகின்றதே யன்றி நம் போன்றவர்களாலல்ல. அந்த மாதிரி சிருஷ்டி செய்யும் வல்லமையுள்ள பகவானும் சிருஷ்டி ஆரம்பகாலத்தில் ஒரு பிராணிக்கு மிருகஜன்மாவையோ மானிட ஜன்மாவையோ கொடுத்துவிட்டால் அந்த ஜன்மாபூராவும் சென்ற பிறகு மறு பிறப்பில் அந்தப் பிராணியின் பாபபுண்யங்களையனுஸரித்து மிருகமாயிருந்ததை மனுஷ்யனாகவோ மனுஷ்யனாயிருந்தவனை மிருகமாகவோ அல்லது வேறு எவ்விதமாகவோ மாற்றி சிருஷ்டி செய்யமுடியுமேயன்றி முந்தி ஒருவிதமான ஜன்மாவைக் கொடுத்துவிட்டு அதன் மத்தியில் நான் உன்னை வேறுஜன்மாவாக மாற்றிவிடுகிறேன் என்று மாற்றியிருப்பதாகத் தெரியவில்லை. அவ்விதம் மாற்றக்கூடிய சக்தி தங்களுக்கு இருந்தாலும் அதைத் தாம் உபயோகப்படுத்தாமல் சிருஷ்டியின் துவக்கத்தில் தான் கர்மாவையனுஸரித்து மாற்றுவோமென்று,

“चातुर्वर्ण्यं मयासृष्टम्” “சாதுர்வர்ண்யம் மயாஸ்ருஷ்டம்”

என்கிற வசனத்தில் ஸ்ருஷ்டம் என்கிற பதத்தால் கீதாசாஸ்திரத்தில் ஸ்ரீ கிருஷ்ணபரமாத்மா வெளியிட்டிருக்கிறார். இதனால் சிருஷ்டி ஸ்திதி ஸம்ஹாரமென்கிற மூன்று கர்மாக்களையும் செய்யச் சக்திபொருந்திய பரமேசுவரரும் ஒரு பிராணிக்கேற்பட்ட ஒரு ஜன்ம மத்தியில் அந்த சரீரத்தோடு மறு ஜன்மாவைக் கொடுக்கமுடியாதென்று தெரிகின்றது. க்ஷத்திரிய ஜாதியிற்பிறந்த விசுவாமித்திரர் அதே ஜன்மாவில் அதே சரீரத்தோடுபிராமண ஜன்மாவைப் பெற்றாரே முடியாதென்றுஎப்படிகூறலாமென்று ஓர் சங்கை ஏற்படலாம்- விசுவாமித்திருடைய சரிதத்தைக் கூறுமிடத்தில் ஆதிமுதல் முடிவு வரையில் நன்றாய் கவனித்துப் பார்த்தால் இதற்குஸமாதானம் சொல்லப்பட்டிருக்கின்றதையறியலாம். விசுவாமித்திரர் உண்மையில் க்ஷத்திரிய பீஜத்துக்குஜனித்தவரல்ல. ஒரு மஹரிஷியால் பிராமணனாக ஜனிக்கவேண்டி அபிமந்தாணம் செய்துகொடுத்த ஹவிஸ்ஸை மாறுதலாக புஜித்தபடியால் க்ஷேத்திரம் மாறிவிட்டது. அந்த தோஷத்தை விலக்கவேண்டி கடுந்தவம் புரிந்தார். அவர் செய்ததவத்தின்வலிமை

யால் சதுர்முகனும் அவர் முன்னிலையிற்றோன்றி தோஷம் விலகி விட்டது. பிராமணந் தான் என்று கூறியிருக்கிறார். இதன் தத்வத்தை நன்கறியாத ஜனங்கள் பலவாறாகக் கூறுவார்கள். எம்மால் எழுதி வெளியிடப்பட்ட ஜாதிதத்வநிர்ணயம் என்கிற கிரந்தத்தில் இதுபோன்ற பல ஸந்தேகங்களுக்கு விஸ்தாரமாக விடையளிக்கப்பட்டிருக்கின்றது. ஆகையால் ஒரு சரீரத்தைப் பெற்ற எந்தப் பிராணியும் அதற்கு அழிவில்லாமல் மேலான ஜாதியையோ கீழான ஜாதியையோபெறமுடியாதென்பது திண்ணம்.

உபபத்திராதிபர்

தீண்டாமைக்கு முடிவு காலம்.

(410-வது பக்கத்தொடர்ச்சி)

ஆனால் ருதுபர்ணன் அதை ஏன் நம்பினான் என்பதற்குக் காரணம் சொன்னால்தான் நம் கார்யம் ஸித்திபெறும். அதைக் கூறுகிறேன். இம்மகாராஜன் தமயந்தியின் ஸ்வயம் வரத்திற்கு வந்திருந்தான். அவன் பல காரணங்களால் அவளை அடைய முயற்சித்தான். அது முடிவுபெறவில்லை. நளனையே வரித்து விட்டாள். அதைக் கண்டு மற்ற அரசர்கள் சரியென்று போய் விட்டனர். ருதுபர்ணன் மட்டிலும் அவளிடத்தில் வைத்த காதலைத் தள்ளவே இல்லை. ஆத்திரக்காரனுக்கு புத்திமட்டு என்ற நியாயத்தை ஒட்டி இப்பத்திரிகையைக் கண்டதும் சாஸ்திரவிசாரணையற்று 2. தினங்களுக்குள் குண்டின நகரம் செல்ல வேண்டுமானால் நளஸாரத்தியமில்லாமல் முடியாதென்று அவனையே அழைத்துவந்தான். ஆகவே தத்வம் இவ்விதமிருப்பதால்இக்கதை மறுமணத்திற்கு ஸாதகமான பிரமாணமாய் நிற்காதென்பதைத் தெரிந்துகொள்ளலாம். ஆனால் வேதத்தில் இருக்கிறதேயென்றால் அதை உபயோகிக்கும் பிரயோகமில்லாமல் அதன் அர்த்தத்தை மட்டும் பார்த்து அனுஷ்டிக்கநியாயமில்லையென்றுமுன்னமேயே கூறிவிட்டேன். இவ்விதம் சாஸ்திரப் பிரமாணமற்றதும் லோகானுஷ்டானமற்றதுமான மறுவிவாகத்தைக்கலியில் வேண்டாமென்று குறிப்பாய்த் தடுப்பானேன் என்றால் கூறுவோம்

பொதுவாய் ஒரு விஷயத்தை ஓர் இடத்தில் கூடாதென்று தடுத்தால் அதுமுன் அனுஷ்டானத்தில் இருந்தது. அப்புறம் அதன் தோஷங்களை அறிந்து இனி அது வேண்டாமென்று தடுத்ததாய் அர்த்தம் கொள்ளவேண்டுமா? அவ்விதமாயின் அஸத்யம் சொல்லாதே. கஞ்சா சாப்பிடாதே, கள்குடிவேண்டாம், பரஸ்திரீகமனம் செய்யாதே என்பதாதி பல நிஷேதங்கள் நம் சாத்திரங்களிற் காணப்படுகின்றன. இதைக்கொண்டு முன்னொரு காலத்தில் இவை அநுஷ்டானத்திலிருந்தன. அப்புறம் அவைகளின் கெடுதல்களை அனுபவித்துவிட்டு அவை வேண்டாமென்று தடுத்தனர் என்று கூறலாமோ. இவ்வளவு தூரம் நம்முன்னோர்களுக்கு மதியீனத்தைக் கற்பிப்பதில் நமக்கு வரும் லாபம் யாது. வேதத்தில் இருக்கும் நிஷேத வசனங்களெல்லாம் அதன் அநீதியான பலனைக்கண்டபிற்பாடு எழுதப்பட்டதென்று நாம் ஒப்புக்கொண்டதாய் நேரும். அப்படியாகும்போது வேதமென்பது அக்கிரம காலத்தில் புத்திசாலிஎழுதிவைத்ததென்று நாம் ஒப்புக்கொண்டதாய் ஏற்பட்டுவிடும் அப்படியே இருக்கட்டுமே அதனால் என்னவென்றால் அவ்விதம் சொல்லவாவது சொல்பவர்களின் கோஷ்டியில் சேர்ந்து க்ஷணமேனும் நிற்கவாவது ஓர் ஆஸ்திகனும் முன்வரமாட்டான், இது போகட்டும் இதற்கு வேறுவிதமாய் சமாதானம் கூறுகின்றேன்.

दृष्टोधर्मव्यतिक्रमस्साहसंच महतां த்ருஷ்டோதர்மவ்யதிக்ரமஸ்ஸாஹஸஞ்ச மஹதாம் மஹான்களிடத்தில் தர்மத்தின் தடுமாற்றமும் ஸாஹஸமும் காணப்படுகிறது. तदन्वीक्ष्यप्रयुञ्जानस्संसीदत्यवरोजनः ததந்வீக்ஷ்யப்ரயுஞ்ஜாநஸ்ஸம்ஸீதத்யவரோஜநः

அதைப் பிரமாணமாய் வைத்துக்கொண்டு அனுஷ்டிக்கும் அல்பவீர்யமுள்ள மனிதன் அழிகிறான் என்றது. மகான்களிடத்தில் சில சமயம் அனுஷ்டானத்திற்கு விரோதமாய்க் கார்யம் ஏற்படும் அதைப் பார்த்து நாம் அனுஷ்டிக்கவே கூடாது. அவர்களுடைய தேஜோபலத்தால் அவர்களுக்குக் குற்றம் வராது. நமக்கோ தபோபலம் முதலியவை இல்லாததால் பாபமே ஸம்பவிக்கும் ஆகையால் முன்காலத்தில் மறுவிவாகம் செய்துகொண்டதாய் எங்காவது பிரமாணம் தென்பட்டால் அதை வைத்துக்கொண்டு நாம் இக்கலியிலும் இவ்விதம் செய்வோமென்று ஆரம்பித்துவிட்

டால் மோசம் வந்துவிடுமென்றெண்ணிக் கலியின் ஆரம்பத்தில் மறுவிவாகம் கலியில் தடுக்கவேண்டுமென்று செய்ததாய்க்கொண்டுவிடுவோம். இனி இவ்விஷயத்தைப்பற்றிஇங்கு விரிப்பதென்றால் போய்க்கொண்டே இருக்குமாதலால் இத்துடன் நிறுத்தி அடுத்த விஷயத்திலிறங்குவாம்.

இரண்டாவது குடும்பத்தில் பாகம் பிரிக்கும்போது மூத்த குமாரனுக்கு அதிக பாகம் கொடுத்தல் அக்காலத்தில் சாஸ்திரீயமாய் இருந்தது. அது இக்காலத்திற்கு வேண்டாமென்று தடுக்கிறது. இவ்விஷயத்தைப்பற்றி இங்கு விவாதமில்லாமையால் அதிகமாய்ச் சர்ச்சை செய்யவேண்டாமென்று விடுவோம்.

மூன்றாவது பசுவதை என்றிருக்கிறது. இதிலும் விவாதமில்லை. முன்யுகத்தில் பசுவால் யாகம் செய்திருப்பதாயும் குதிரையால் யாகம் செய்திருப்பதாயும் தெரிகிறது. அவ்விரண்டையும் இக்காலத்தில் வேண்டாமென்று விலக்கிவிட்டார்கள். நாலாவதில் சகோதரன் மனைவியிடம் செல்லுதல் என்றிருக்கிறது. இதைச் சற்று விசாரிப்போம். முன் யுகங்களில் ஸகோதரன் புத்திரபாக்கியம் பெறுமலிருந்து இறந்துவிட்டால் புருடனின் ஸகோதரன் அவளிடத்தில் பிரவேசித்து புத்திரனை உண்டுபண்ணுவது என்ற வழக்கம் ஏற்பட்டிருந்ததாய்த் தெரிகிறது. அதனாலேயேதான் வியாஸரால் ஸஹோதரன் மனைவிகளிடத்தில் த்ருதராஷ்டிரன் பாண்டு விதுரன்முதலியவர்களை உண்டுபண்ணியதாய் பாரதத்தின் மூலமறிகிறோம். அதுபோல் இந்த யுகத்திலும் அனுஷ்டானம் வைத்துக்கொள்ளக்கூடாதென்று தடுத்துவிட்டன.

3. இங்குள்ள உண்மை இது. இவ்விதம் உத்பத்தி செய்யவேண்டியது என்பது கட்டாயமான விதியில் சேர்ந்ததல்ல. இதுவும் முன்போல் ஐச்சிகம் தான் அதாவது அவ்விதமாவது புத்திரன் வேண்டியது தான் அதில்லாவிடில் வம்சம் விட்டுப்போகும் என்றிருக்கிறவிடத்தில் இந்த விதிக்குப் பிரவேசமுண்டு. அதில் சகோதரன் மிகவும் ஜிதேந்திரியனாய் இருக்கவேண்டும் அவளிடத்தில் விருப்பமுள்ளவனாய் இருக்கவே கூடாது. அநேகர்களின் நிர்ப்பந்தத்தால் அவன் மனம் நொந்து ஐயோ பெரியோர்கள் நிர்ப்பந்திக்கிறார்களே என்று உள்ளம் கரைந்து தைவ ப்ரார்த்தனையுடன் பிரவேசிக்கவேண்டும். அவனும் ஒரு தடவை

தான் பிரவேசிப்பான். இக்காலத்திலோ காமமே முக்கியப் பிரவிருத்தியாய் இருப்பதால் இதைத் தடுக்கவேண்டியதவசியம் தானென்பதை மறுக்கமுடியாது. அடுத்ததை கவனிப்போம். இது கமண்டலு தரித்தல் கூடாதென்பதைத் தடுக்கிறது. அதாவது இக்கலிக்கு ஸன்னியாஸாச்ரமம் கூடாதென்கிறது. ஆனால் அது இப்போதும் அனுஷ்டானத்திலிருக்கிறது. அதன் காரணம் யாதென்றால் இது ஸாமான்ய நிஷேதமெனப்படும் இதற்கு விலக்காக

यावद्वर्णविभागोऽस्ति यावद्वेदः प्रवर्तते ।
सन्यासं चाग्निहोत्रं च तावत्कुर्यात्कलौयुगे ॥

யாவத்வர்ணவிபாகோ(அ)ஸ்தி யாவத்வேத: ப்ரவர்த்ததே ।
ஸந்யாஸம் சாக்நிஹோத்ரம் ச தாவத்குர்யாத்கலௌயுகே ॥

வர்ணாசிரமப் பிரிவு எவ்வளவு காலம் நிலைபெற்று நிற்கிறதோ, வேதம் எவ்வளவு காலம் பிரகாசித்துக்கொண்டிருக்கிறதோ அதுவரை கலியில் அக்னிஹோத்ரம் உண்டு. ஸன்னியாஸாச்ரமமும் உண்டு என்றும்,

यतेश्च सर्ववर्णेषु भिक्षाचर्यविधिस्तथा ।

யதேஶ்ச ஸர்வவர்ணேஷு பிக்ஷாசர்யவிதிஸ்ததா ।

ஸன்னியாஸி எல்லா வருணத்தவர்களிடத்து பிக்ஷை வாங்குவது கூடாது என்று கலியுக நிஷேதத்தில் வேறு ஸ்மிருதி வசனமிருப்பதால் ஸன்னியாஸ தர்மமுண்டு. ஆனால் அவன் பிராமணஜாதியாரிடத்தில் தான் பிக்ஷை வாங்கலாம் என்று இக்கலியில் ஒப்புக்கொள்ளப்பட்டிருப்பதாய் விசேஷ வசனங்கள் காணப்படுகின்றமையால் ஸன்னியாஸத்திற்கு நிஷேதமில்லையென்று அனுஷ்டித்து வருகிறார்கள். இவ்விசேஷ விதியிருப்பதைப் பொருட்படுத்தாமல் நம்முன்னோர் இவ்வாச்ரம தர்மத்தைக்கையாளாமல் விட ஆரம்பித்தனர். பட்டபாதர் அவதரித்து பூர்வகாண்டத்திற்கு பாஷ்யம் எழுதி மண்டனமிச்ருக்குக் கற்பித்தனர். அவர் கன்மமார்க்கமே மிகப்பெரிது. நிவர்த்திமார்க்கம்வேண்டாம். என்று ஸன்னியாஸாச்ரமதர்ம்மத்தை மிகவும் கண்டித்து ஸன்னியாஸமே இல்லாமற் செய்துவிட்டனர். பிறகு ஷண்மதஸ்தாபனத்திற்காக அவதரித்த நம்மகான் பகவத்பாதாள் மண்டனமிச்ருடைய மதத்தைக் கண்

4-60

டிக்கவே தான் கிருகஸ்ததர்மத்தை அடையாமலே எந்த நிமிஷம் வெறுப்பு வந்ததோ அந்த நிமிஷமே ஸன்னியாஸம் கொள் என்பதாதி சுருதி வசனங்களை அனுஷ்டானம் செய்துகாட்டிக்கொண்டு ஸன்னியாஸாச்ரம தர்மத்தையும் நிலை நிறுத்தினார்கள் என்பது ஓர் தத்வம். ஆகவே கலியில் ஸன்னியாஸம் தள்ளுபடியல்ல. பிறகு அவதரித்த தீக்ஷிதாவர்கள் கிருகஸ்ததர்மத்தில் அக்னிஹோத்ரம் நித்யமென்பதை ஸ்தாபித்தார். ஆகவேகலியில் ஸன்னியாஸம் தள்ளுபடியில்லையென்பதை அறியலாம்.

அடுத்து வானப்ரஸ்தாச்ரமம் கலியில் வேண்டாமென்றிருக்கிறது. இவ்வாச்ரமத்தில்தான் நம் முன்னோர்களான மகரிஷிகள் இருந்தார்கள். இவர்கள் காட்டில் பத்னியோடாவது அல்லது அவளில்லாமலாவது வஸித்துக்கொண்டு காய்கனி கிழங்குகளைப் புசித்துக்கொண்டு வருகின்ற அதிதிகளுக்கு மரியாதைசெய்துகொண்டிருக்கவேண்டும். இத்தகைய ஆசிரமம் இக்காலத்தில் வேண்டாமென்று தடுத்துவிட்டார்கள். இது நியாயமென்பதுஊகிப்பவர்களின் புத்தி ஸாமர்த்தியத்திற்குத் தக்கவாறு விளங்கும்.

இனி அடுத்து தானம் கொடுக்கப்பட்டு அந்தக்கன்னிகை பிரௌடையாவதற்குமுன் வேறுமணம் செய்விக்க நேர்ந்தால் மணம்செய்துகொடுக்கலாம் என்பதைக்கண்டிக்கிறது. இது,

ऊढायाः पुनरुद्वाहम् ஊடாயா: புநருத்வாஹம்

என்றமுதல்விஷயத்திலேயே கூறப்பட்டுவிட்டது. ஆயினும் சற்று இங்குதோன்றும் விசேஷத்தைமட்டிலும் கவனிக்கவேண்டும். அதாவது முதலில் ஸாமான்யமாய் எந்தஸ்திரீக்கும் மறுமணம் செய்யலாமென்றேற்படுகிறது. இந்த விசேஷவசனத்தால் பிரௌடையாகாமலிருக்கும்போது புருடன்மரித்துவிட்டால்அப்போது அவளை இன்னொருவனுக்கு விவாகம்செய்யலாமென்று கூறுவதால் அத்தகைய கன்னிகைமட்டிலும் மறுவிவாகம் முன்யுகங்களில் ஏதோ நடந்ததுபோலும் அது இக்கலிக்கு வேண்டாமென்று தடுத்ததாகவும் ஏற்படுகிறது. இதற்குமேல் இக்காலத்திய புதிய மேதாவிகள் அக்ஷதா என்றால் புருஷனுடன் போகமனுபவியாதவள் என்று மனுஸ்மிருதியில் மேதாதிதி கூறுகிறதாய் வெளிவருவதால் பிரௌடையானதற்கப்புரம்தான் விவாகம் ஏற்படுவது

சாஸ்திரீயமென்று கூச்சல் போடுகின்றனர். இதிருக்கட்டும்; இவ விவாகம் இக்கலியிலும் செய்யலாமென்று

नष्टे मृते प्रव्रजिते क्लीबेच पतितेपतौ ।
पञ्चस्वापत्सु नारीणां पतिरन्यो विधीयते ॥

நஷ்டே ம்ருதே ப்ரவ்ரஜிதே க்லீபேச பதிதேபதௌ ।
பஞ்சஸ்வாபத்ஸு நாரீணாம் பதிரந்யோ விதீயதே ।

புருஷன் காணாமற்போய்விட்டாலும் இறந்துவிட்டாலும் ஸன்னியாஸம் செய்துகொண்டுவிட்டாலும் பேடியாய்ப்போய்விடினும், பதிதனாய்ப்போய்விடினும் ஆகிய இவ்வைந்து ஆபத்துக்களில் ஸ்திரீகள் மறுமணம் செய்துகொள்ளலாம் என்றிருக்கிறது. பராசரர் கலிதர்மத்தையே விசேஷமாய்க்கூறமுன்வந்தபடியால் அவர் வசனமானதாலும் இதற்கு மதிப்புக் கொடுக்க வேண்டுமென்று பக்தியுடன் கூறுகின்றனர். இதன் அர்த்தம் இவர்கள் கொண்ட பிரகாரம இல்லையென்பது இப்பத்திரிகையில் பன்முறை வெளி வந்திருப்பினும் இங்கு பிரகிருதமாதலால் மீண்டும் சுருங்கக்கூறி விடுகிறேன். இதில் पतौ பதௌ என்று 7ம் வேற்றுமையைக் குறிக்கும் பதம் இருக்கிறது. இது வ்யாகாண சாஸ்திரப்படி पत्यौ பத்யௌ என்றிருக்க வேண்டும். ஆனால் பதௌ என்பதை ஆர்ஷம் என்று சொல்லி விடலாமேயென்றால் சொல்லலாம். அப்படி இங்கு சொல்லவேண்டுமென்ற நிர்ப்பந்தம் இல்லை. ரிஷியின் ஸம்மததததை நன்கு தெரிவிப்பதற்காக அப்பதம் வேண்டுமென்றுதான் போடப்பட்டிருக்கிறது. ஆகவே இப்போது அப்பதத்திற்கு வியாகரணரீதியாய் சரியான அர்த்தம் கூறவேண்டுமாயின் பதிபோல் பாவிக்கப்பட்டவன் என்றாகும். இதுதான் ரிஷியின் அபிப்பிராயம். பதிபோல் பாவிக்கப்பட்டவன் என்றால் முற்கூறியவாறு வாக்கால் நிச்சயம் செய்யப்பெற்றவன் என்றர்த்தம். இதை நாம் லோகத்திலும் அனுபவத்தில் கண்டிருக்கிறோம். எப்படியென்றால் ஒருவானுக்கு நிச்சயம் ஆய்விட்டால் அக்கன்னிகை அப்புருடனைக்கண்டால்தலைகுனிவதையும்கன்னியின் பெற்றோர்கள் வரன் வழியில் போகும்போது இவன்தான் மாப்பிள்ளையென்றும் சொல்கிறார்கள். இவ்விதம் ஸொந்தம் பெற்றவனுக்கு முற்கூறிய ஐந்து ஆபத்துக்களில் ஏதாவதொன்று வந்தால் யாது செய்வதென்பதையும் நிகழ அதற்குச் சமாதானமாய்ப் பராசரர்

இவ்வசனத்தை விடுத்தார். ஆனல் இதற்காக இவ்வசனம் சொல்லத்தான் வேண்டுமோவென்றால் வேண்டியதுதான். ஏனெனில் ஸாவித்ரியின் சரித்திரத்தின்படி வாக் தானம் செய்தபின் மாறக்கூடாதென்றே முன் யுகங்களில் வெளியாவதால் இந்தயுகத்திற்கு அது வேண்டாமென்று பராசரர் ஸ்பஷ்டமாய்க் கூற வேண்டி இடமேற்பட்டது, ஆகவே இது மறுமணத்திற்கு ஸாதகம் இல்லை. ஒருசமயம் முற்கூறியவாறு முன்யுகம்போல் மறுமணம் இப்போதும் செய்யலாமென்று வேறுவிதமாயும் ஆரம்பிக்கக் கூடாதென்பதற்காகவே இங்கும் நிஷேதம் செய்தார்களெனக்கொள்க.

M. N. சுப்பிரமணிய சாஸ்திரி,

பொன்மலையில் பிரம்மஸ்ரீ போலகம் சுந்திரசாஸ்திரிகள் அவர்களால் செய்யப்பட்ட பகவத் கீதா உபன்யாஸத்தின் சுருக்கம்

(405-வது பக்கத்தொடர்ச்சி)

அத். 8 சு. 12 அர்ஜ்ஜுனனின் ஆசங்கை— முன் அத்யாயத்தில் 29 30வது சுலோகங்களில் சொன்ன பிரும்மமென்பது என்ன? நிர்குணப்பிரம்மமா? ஸகுணபிரம்மமா? ஸகுணமாகில் தேஹேந்திரியாதிகளைப் பிரவிருத்திக்கச் செய்யும் வியாபகமாய் இருக்கும் பிரம்மத்தையா அல்லது வைகுண்டாதி லோகங்களில் சதுர்புஜ, சங்குசக்கர கதாபாணியாக இருக்கும் ஸ்ரீமஹாவிஷ்ணுவாதி பரிச்சின்னமாயிருக்கும் ஈச்வரனையா பிரம்மம் என்று சொல்லுகிறது. அத்யாத்மம் என்றால் தேகத்தோடு சம்மந்தப்பட்டது என்று அர்த்தம். கண் மூக்கு முதலியவைகளும் ஜீவனும் தேகத்தோடு சம்பந்தப்பட்டதாக எல்லோருக்கும் தெரிகிறதே இதுதான் அத்யாத்மமா அல்லது வேறு என்பது யாரை யாரைக் குறிக்கிறது. அவர் இந்த தேஹத்திலுள்ளவரா வெளியிலுள்ளவரா எவ்விதப்பலத்தைக் கொடுக்கிறார். அதிபூதம் என்பது என்ன? அதிதெய்வம் என்பது யாது? அதியக்ஞன் மரண காலத்தில் மனதையடக்கினவர்களாலே எப்படித்தெரிந்து கொள்ளத்

தக்கவராகிறார். மரணகாலத்தில் ஜீவன் தேகத்தை விட்டுப் பிரியும்போது மனது மிகவும் அவஸ்தைப்படும். தேகம், இந்திரியம், மனது முதலியவைகள் மிகவும் அவஸ்தைப்படும். ஸ்வாதீனத்தை ஸர்வதா இழந்து விடும். அப்படிப்பட்ட சமயத்திலுங்கூட எவ்விதம் தங்கள் ஸ்வரூபத்தையே பக்தர்கள் நினைத்துக்கொண்ருக்க முடியும்,

சு. 3. ஸ்ரீகிருஷ்ணபகவானின் உத்தரம்— பிரம்மமானது அக்ஷரம் ஒருகாலும் நாசமடைகிறதில்லை எங்கும் வியாபகமாகவுள்ளது. அதாவது நிர்குணப்பிரும்மத்தைக் குறிக்கிறது. ஸகுணமும் வியாபகமன்றோ என்றால் "பரம்" "பரமம்" என்ற விசேஷ குணத்தினால் அதைக் குறிக்காது ஸகுணப்பிரம்மம் மாயையோடு கூடியிருப்பது. மாயைக்கு அழிவு உண்டு அப்பொழுது அதோடு கூடிய பிரம்மமும் நசிக்கக்கூடியது. ஆகையால் நிர்குணப்பிர்ம்மத்தையே நிரூபிக்கிறது.

அத்யாத்மம் என்றால் தேகத்தோடு சம்மந்தப்பட்ட கண் கால்களைத் தெரிந்துகொள்வதல்ல, ஜீவனுடைய நிஜமான சுத்த ஸ்வரூபம் அத்யாத்மம் என்று சொல்லப்படுகிறது. பிராணிகளின் உற்பத்திக்கும் அபிவிருத்திக்கும் காரணமான யாகம் தானம் ஹோமம் ஆகிய தியாகத்தைக் கருமம் என்று அறியவேண்டும். தியாகம் என்றால் விடுதல் என்று அர்த்தம் மனதால் இதை இந்த தேவதைக்குக் கொடுத்துவிடவேண்டுமென்று அந்த திரவியத்தை அக்னி முதலான இடத்தில் போடுவதை ஹோமமென்றும் தன் பொருளை அன்னியனுக்கு ஸ்வாதீனப்படுத்துகிறதை தானம் என்றும் வியவகரிக்கிறோம். இதனால் பிராணிகளுக்கு அபிவிருத்தி எப்படி ஏற்படுகிறதென்றால் ஸகலப்பிராணிகளுக்கும் ஆதாரம் அன்னம். அதற்கு மழை அவசியம். அந்த மழைக்கு ஹோமங்கள் முக்கிய ஆதாரம். 3வது அத்யாயத்தில் பகவான் சொன்னப் பிரகாரம் ஹோமம் செய்வதினால் தேவதைகளுக்குப் பிரீதி ஏற்படுகிறது. அதினால் மழை பொழிகிறது.

சு. 4. நசிக்கக்கூடிய பிராணிகளின் தேஹேந்திரியாதிகள் அதிபூதம். சு. 5. அதிதெய்வம் என்பது ஹிரண்யகர்ப்பன். அவர்தான் முதலில் உற்பத்தியானவர். அவரிடமிருந்து தான் நாமெல்லோரும் வெளிவந்தவர்கள், அவர்தான் தேவதைகளை

நிர்மாணம் செய்து நம்முடைய தேஹங்களிலிருக்கச் செய்து அந்த தேவதைகளின் துவாரா கண் காது முதலிய இந்திரியங் களுக்குப் பார்க்கவும் கேழ்க்கவும் வேண்டிய சக்திகளைக் கொடுக் கிறார். ஆகையால் அதிதைவதமென்று சொல்லப்படுகிறார்.

சு. 6. இந்த தேகங்களில் அந்தர்யாமியாக இருந்துகொண்டு நானே யக்ஞாதிகளுக்குப் பிரவர்த்தகனுயிருப்பதால் அதியக்ஞன் என்று சொல்லப்படுகிறேன். யாதொருவன் அப்பியாஸத்தினால் கடைசி காலத்திலும் என்னையே ஸ்மரித்துக்கொண்டு சரீரத்தை விட்டுப்போகிறானோ அவன் என் ஸ்வரூபமாகி விடுகிறான். இதில் சம்சயமேயில்லை. கடைசி காலத்திலும் என்பதினால் அடிக்கடி என்னை ஸ்மரித்து அப்பியாஸம் இருந்தால்தான் கடைசிகாலத்தில் என் ஞாபகம் வரும் என்றும் ஏற்படுகிறது. என் ஸ்வரூபமாத்திர மல்ல அந்திய காலத்தில் எந்தெந்த ஸ்வரூபத்தை நினைத்தவ னாய் தேகத்தை விடுகிறானோ அந்தந்த ரூபத்தையே அடைகிறான் ஜடபரதர் பரமஞானஸம்பன்னராக இருந்தாலும் கடைசி காலத் தில் மானை ஸ்மரித்தபடியால் மறு ஜென்மத்தில் மானாகப் பிறக்க வேண்டியிருந்தது. ஆனால் அவர் எண்ணிக்கொண்டிருந்த மானாக ஆகவில்லையே வேறொரு மானாகத்தானே பிறந்தார் அப்படியிருக்க பகவானைத் தியானித்தவர்கள் மாத்திரம் எப்படி பகவானேயாவர் என்றால் மற்ற இடங்களில் அப்படித்தான். ஆனால் என்னை தியா னம் செய்கிறவர்கள் மேல் சொல்லப்போகிற மார்க்கமாகப்பிரம்ம லோகம் எனும் வைகுண்டத்தையடைந்து எனக்குச் சமமான ரூபத்தோடு கூட திவ்ய போகங்களை அனுபவித்து முடிவில் என் ஸாக்ஷாத்காரத்தினால் என் ஸ்வரூபம் அவரது என்னும் மோக்ஷத் தையடைகிறார்கள்.

சு. 7. ஆகையால் எப்பொழுதும் என்னையே ஸ்மரித்துக் கொண்டு ஸ்வதர்மானுஷ்டானமாகிற யுத்தத்தையும் நித்திய நை மித்திக கருமங்களையும் செய்யும்போது என்னிடத்தில் மனதை அர்ப்பணம்செய்து விடு. இப்படிச் செய்வதால் என்னையே அடை வாய் என்பதில் சம்சயமேயில்லை.

சு. 8. இனி பகவான் உபாஸனாக்கிரமங்களைச் சொல்லுகிறார். கடைசிகாலத்தில் பகவத் ஸ்மரணம் வருவதற்குக் காரணமான சில உபாஸனைகள் யாதெனில் அப்பியாஸம் யோகம் முதலியன.

நித்திய நைமித்திக கர்மாக்களுக்கு விரோதமில்லாத காலங்களில் மனதால் உபாஸிக்க வேண்டிய வஸ்துவை விசாரிப்பது அப்பியாஸம். ஒவ்வொரு நாளும் அந்தந்தக்காலங்களில் அனுஷ்டிக்கப் படும் உபாஸனம் யோகம் இவைகளுடன் கூடிய வேறு விஷயத்தை யடையாத மனதினால் அப்பிராக்ருதமான புருஷஸ்வரூபத்தை தியானம் செய்து அதையே அடைகிறான்.

சு 9-10 சஞ்சலமற்ற மனதோடும் பக்தியோடும் தியான பலத்தோடும் கூடியவனாய் பிராணனைப் புருவமத்தியில் செவ்வையாய் நிறுத்தி ஸர்வக்ஞனும் புராதனனும் ஸகலத்திற்கும் பிரேரகனும் அணுவிலணுவாயும் ஸகலப் பிரபஞ்சத்திற்கும் இரக்ஷகனையும் சிந்திக்கக்கூடாத ரூபமுடையவனையும் மாயையைக்கடந்தவனையுமிருக்கிற பரமபுருஷனை எவன் இடைவிடாது ஸ்மரிக்கிறானோ அவன் கருமத்திற்கு வசமாகாது. பிராணாயாம அப்பியாசத்தால் சுவதந்திரனாகி தனக்கிச்சையான காலத்தில் ஈசுவரத்தியானத்தோடு பிராணனை சுஷும்னா நாடி வழியாக சூரிய கிரணத்தோடு சம்மந்தப்படுத்தி அக்கிருந்து பரமாத்மாவை அடைகிறான். ஆகையால் பகவத்ஸ்வரூபம் அந்திமகாலத்தில் விலகாது என்பது நிரூபிக்கப்பட்டது.

சு. 11-13. வேதார்த்தங்களை அறிந்தவர்கள் எதை அக்ஷரமென்று சொல்லுகிறார்களோ, காமக்குரோதங்களை விட்டிருக்கிற யதிகள் எதைச்சேருகிறார்களோ, எதை அறிய விரும்பிப் பிரம்மசர்ய விரதத்தை அனுஷ்டிக்கிறார்களோ அது எப்படிப்பட்டதெனச் சொல்லுகிறேன் (ஓங்காராதியான வகையைச் சொல்லுகிறார்).

எவன் தன்னுடைய இந்திரியத்துவாரங்களை அப்பியாஸத்தால் அடக்கி மனதை ஹிருதயத்தில் நிறுத்தி பிராணவாயுவை சிரஸில் அடக்கி வைத்து ஸ்திரமான யோகாப்பியாஸத்தையடைந்து பிரம்மத்தைச் சொல்லுகிறதாகிய "ஓம்" என்னும் ஒரு அக்ஷரத்தை உச்சரித்து என்னை (பிரம்மத்தை) இடைவிடாமல் ஸ்மரித்து தேகத்தை விடுகிறானோ அவன் சிரேஷ்டமான கதியை அடைகிறான்.

கடவல்லி உபநிஷத்தில் சொல்லப்பட்ட ஓங்காரப்பிரம்ம உபாஸனம் 3 சுலோகங்களினால் சொல்லப்பட்டிருக்கிறது.

(தொடரும்) வி. என். ராமனாதன்.

466

தமிழ்ப் பஞ்சாங்க ஆராய்ச்சி.

சோதிடசாஸ்திரமானது மற்ற இந்து சாத்திரங்களுக்கு உறுப்புகளிற் சிறந்த கண் போன்றது. அதனின்றும் சூரியன் முதலிய கிரகங்களின் தானங்களும் அச்வினி பரணி முதலிய நக்ஷத்திரங்களின் தானங்களும், அறிந்து கொள்ளத்தக்கனவாம். ஆயினும் அவைகளைப் பஞ்சாங்கமென்னும் ஒரு நூலினின்று நன்கு அறியலாகும். அன்றியும் பஞ்சாங்கங்களில் திதி, வாரம், நக்ஷத்திரம், யோகம், கரணம், ஒவ்வொருதினத்திற்கும் கொடுக்கப் பட்டு வருகின்றன. இவ்வைந்து விடயங்களைக்கொண்டுதான் இந்துக்கள்தம் சாத்திரங்களிற் சொல்லியபடி தங்களுக்கு ஏற்பட்டசுபாசுபக்கிரியைகளை நடத்திவருகிறார்கள்

தற்காலத்தில் வழங்கிவரும் பஞ்சாங்கங்களின் நிலைமை:— அச்சியந்திரசாலைகள் ஏற்பட்டது முதல் பஞ்சாங்கங்களின் எண்கள் ஒவ்வொருவருடமும் நிரம்பவும் பெருகிவருகின்றன. அங்ஙனம் பயின்றுவரும் பஞ்சாங்கங்களுள் திதிமுதலிய விடயங்களின் கால அளவைக் குறித்தும் கிரஹங்களின் ஸாரங்களைக் குறித்தும் ஒன்றிற்கூறியவாறு மற்றொன்றில் இல்லை. உதாரணமாக மாதப் பிறப்பின் காலவிடயத்தில் வாக்கிய பஞ்சாங்கங்கள் ஒருவிதமாகவும், திருக்கணித பஞ்சாங்கங்கள் வேறுவிதமாகவும் சொல்லுகின்றன. இதனால் திருக்கணித பஞ்சாங்கங்களுக்கும் வாக்கிய கணிதபஞ்சாங்கங்களுக்கும் தேதி வித்தியாசம் சில மாதங்களில் ஏற்படுகிறது. தென்னிந்தியாவில் அச்சிடப்படுகிற பஞ்சாங்கங்கள் எல்லாம் சித்திரை 7-ம் தேதி சுமாருக்கு ரிஷபாயனமென்றும், வைகாசி 7உ சுமாருக்கு மிதுனாயனமென்றும், இம்மாதிரி மற்றெல்லாமாதங்களிலும் நெடுநாளாய்க்குறிப்பிட்டு வருகின்றன. அப்பஞ்சாங்கங்களில் ஒன்றில் சில வருடங்களாக, சித்திரை 7உ சுமாரில் ரிஷபாயனத்திற்கேற்ப "விஷ்ணுபதி" என்றும் வைகாசி 7உ சுமாரில் கடகாயனத்திற்கேற்ப தக்ஷிணாயன புண்யகாலமென்றும் இம்மாதிரி மற்ற மாதங்களில் மற்ற புண்யகாலங்களும் குறிப்பிடப்பட்டுள்ளன. மேலும் வைகாசி முதல் தேதியில் "சிலர் விஷ்ணுபதி" யென்றும் ஆனிமுதல் தேதியில் "சிலர் ஷடசீதி" என்றும், ஆடி முதல்தேதியில் "சிலர் தக்ஷிணாயனம்" என்

றும், இம்மாதிரி மற்றபுண்ணியகாலங் களும், அதே பஞ்சாங்கத்தில் குறிப்பிட்டுள்ளன. ஆகவே "சங்கிரமண" புண்ணியகாலங்கள் எல்லாவற்றிற்கும் ஏறக்குறைய 23 நாள்கதி வித்தியாசமுள்ள இரண்டிரண்டு தேதிகள் கொடுக்கப்பட்டிருக்கின்றன. இவ்விரண்டு தேதிகளுக்குள், ஒவ்வொருமாதத்திலும் 7௳ சுமாரில் அயனும்சத்தை அனுசரித்துக் குறிப்பிடப்பட்டிருக்கிற சங்கிரமண புண்ய காலங்களை நாம் கைக்கொள்வது தகுதியா என்றும் மேஷரவி ரிஷபரவி முதலியவற்றிற்கேற்ப மாதங்களின் முதல் தேதிகளிலாவது அப்புண்யகாலங்களை ஏற்றுக்கொள்வது தகுதியாவென்றும் விசாரிப்பது இன்றியமையாததாகும்.

விஷுவம், உத்திராயணம், தக்ஷிணுயனம் முதலிய சொற்களின் பொருள் ஆராய்ச்சி:— விஷுவம என்ற வடமொழிப்பதத்திற்கு அகஸ் அல்லது பகல்காலம் 30 நாழிகைகள் உள்ள தினம் என்பது பொருள். அயனம் என்ற சொலவழி, பிறப்பு, பாதை என்று பொருள்படும். ஆகவே உத்திராயணம் என்றால் வடக்குப் பாதை அதாவது சூரியன் வடக்கே நோக்கிச் செல்லும் பாதை என்று நாம் கொள்ளலாம். அம்மாதிரியே தக்ஷிணுயனம என்றால் சூரியன் தெற்கே நோக்கிச்செல்லும்பாதையென்று நாம் கொள்ளலாம். உத்தராயண ஆரம்பதினத்திற்கு உள்ள பகல் பரிமாணம் மிகக் குறைந்ததாயும் தக்ஷிணுயன ஆரம்பதினத்திற்கு உள்ள பகலின் பரிமாணம் மிகுதியாயும இருக்கவேண்டுமென்று கணித சாஸ்திரங்களிலிருந்து புலனுகின்றது. இவ்வகைக் கணக் கைக்கொண்டு மேற்சொல்லப்பட்ட சங்கிரமண புண்ணிய காலங்களின் தேதிகளைக் கவனிக்கும்போது, ஒவ்வொரு மாதமும் 7௳ சுமாரில் அயனும்சத்திற்கேற்பக் குறிப்பிடப்பட்டிருககிற புண்ணியகாலங்கள்தான் சரியென்று மாதங்களின் கடைசி தேதிகளிலாவது முதல்தேதிகளிலாவது குறிப்பிடப்பட்டிருக்கிற புண்ணிய காலங்கள் தவறுனவையென்றும், நன்கு புலனுகின்றது.

மேஷரவி மேஷாயனம் இவைகளின் பொருள் ஆராய்ச்சி:— மேஷம் ரிஷபம் முதலிய ராசிகளின் பெயர்கள் வேதங்களிலாவது அவைபோன்ற முதுநூல்களிலாவது காணப்படவில்லை. இதிலிருந்து வேதகாலங்களில் நக்ஷத்திரமண்டலம் ராசிகளாகப் பகுக்கப்படவில்லையென்று ஏற்படுகின்றது. ஆனால் கிரேக்கர்

களைப் பார்த்துத்தான் நக்ஷத்திரமண்டலத்தை இந்துக்கள் ராசிகளாகப் பகுத்துள்ளார்கள் என்று சரித்திர விசாரணையிலிருந்து ஏற்படுகிறது. ஆகவே மேஷ ரிஷபாதி பதங்களுக்கு கிரேக்கர்கள் முதலான மேனாட்டார் கொடுக்கும் பொருள்களை நாமும் கொள்ளவேண்டுமென்று ஏற்படும். அம்மேனாட்டார் மேஷரிஷபாதி ராசிகளின் பெயர்களுக்கு இருபொருள் கொடுத்திருக்கிறார்கள்.(1) 30பாகைகள் (degrees) அடங்கியவீடுகள்(2) அப்பெயர்களுக்கேற்ற மிருகங்களின் உருவங்கொண்ட நக்ஷத்திரககூட்டங்கள் மேஷமென்ற நக்ஷத்திரக்கூட்டத்திற்கும் மேஷமென்ற வீட்டிற்குமுள்ள (பாகை) கதிவித்தியாசந்தான் அயனும்சம் என்பது. ஆகவே மேஷாயனமென்றால் மேஷமென்ற வீட்டிற்குச் சூரியன் வரும் சமயமென்றும் நாம் பொருள் கொள்ள வேண்டும். மேஷமென்ற வீட்டின் லக்ஷணமென்னவெனின், அவ்வீட்டிற்குள்சூரியன் நுழையும் தினத்திற்குள்ள அஹஸ்ஸு ஒரிஜனல் 30 பாகை (degree)களுக்குத்தான் மேஷமென்றும், அடுத்த 30 பாகைகளுககு ரிஷபமென்றும், மேனாட்டார் பொருள் கொடுக்கிறார்கள் ஆகவே மேஷாயனம் ரிஷபாயனம் முதலியவைகள் மேஷ ரிஷப முதலிய வீடுகளுக்குள் சூரியன் நுழையும் சமயங்களைக்கொண்டு குறிப்பிடப்பட்டிருக்கிற சங்கிரமண புண்ணிய காலங்களென்றும் மேஷரவி ரிஷபரவி முதலியன. மேஷரிஷப முதலான பெயர்களுக்கேற்ற நக்ஷத்திரக கூட்டங்களுக்குள் சூரியன் நுழையும் சமயங்களைக்கொண்டு குறிப்பிடப்பட்டிருக்கிற சங்கிரமண புண்ணிய காலங்களென்றும் நன்கு புலப்படுகின்றது.

ஸாயன நிரயனக்கணக்குகளில் எது ஏற்கத்தக்கது? மேஷரிஷபமுதலான வீடுகளையும், அயனும்சத்தையும் அனுசரித்தகணக்குககு ஸாயனக கணக்கென்று பெயர். மேஷரிஷப முதலான நக்ஷத்திரக்கூட்டங்களை அனுசரித்தகணக்குக்கு நிரயனக் கணக்கென்று பெயர். ஸாயனப்படி வருஷமென்பது ஒரு சித்திராவிஷுவத்திலாரம்பிக்கிறது. ஒரு ஸாயனவருஷத்தின் நீளம் சராசரியில் 365-நாள்-14-நாழிகை 32-வினடியாகிறது. நிரயனப்படி வருஷமென்பது சூரியன அசுவதிக்குள் நுழையும் சமயத்தில் ஆரம்பிக்கிறது.

(தொடரும்)

விருத்தாஜலம். K.V. நாராயணஸாமி அய்யர்.
பி, ஏ, எல், டி,